# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com



# "நற்செய்தி சந்தோஷத்தை பொங்கி வழியச் செய்கிறது!"




*மான்மின் நியூஸ்* சிருஷ்டிகராகிய தேவனையும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியையும் சகல தேசங்களிலும் உள்ள சகல ஜனங்களுக்கும் பரவச் செய்து, எண்ணற்ற ஜனங்களுடைய வாழ்க்கையை புதுப்பித்துக்கொண்டு வருகிறது.

## ஜனங்களுக்கு ஜீவன் தருகிற *மான்மின் நியூஸ்* அதனுடைய 700வது கொரிய பதிப்பை வெளியிட்டது

*மான்மின் நியூஸ்* தற்சமயம் 32 மொழிகளில் வெளியீடப்பட்டு, உலகம் முழுவதும் இருக்கிற ஆத்துமாக்கள் தேவனுடைய அன்பு நிறைந்த ஒரு வாழ்க்கையை வாழும்படி உதவி செய்கிறது. கொரிய மொழியில் *மான்மின் நியூஸ்* சமீபத்தில் அதன் 700வது பதிப்பை வெளியீட்டது.

*மான்மின் நியூஸ்*, அதன் ஜீவன் நிறைந்த பொருளடக்கங்கள் மூலம் தங்களுடைய விசுவாசத்தை அதிகரிக்க விரும்புகிற சபை அங்கத்தினர்களுக்கும், தேவனை அறியாத ஜனங்கள் தேவ கிருபையை பெற்றுக்கொள்ளவும் உதவுகிறது.

முதல் பக்கம் சபையினுடைய வல்லமையான ஊழியங்களான வெளிநாட்டு கூட்டங்கள், போதகர்கள் கருத்தரங்குகள், சுகமளிக்கும் கைக்குட்டை கூட்டங்கள் மற்றும் சபையின் மற்ற நிகழ்ச்சிகளை கொண்டுள்ளது. இரண்டாம் பக்கத்தில் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய பதில்கள் மற்றும் ஆசீர்வாதத்திற்கான பாதையை விளக்கும் செய்திகள் உள்ளன. மூன்றாம் பக்கத்தில் இருதயத்தில் சத்தியத்தை எப்படி பண்படுத்துவது, உலகத்தை எப்படி மேற்கொள்வது போன்றவைகளை அறிய உதவும் விசேஷித்த கட்டுரைகள் உள்ளன. நான்காம் பக்கம் உலகமெங்கிலுமிருந்து தேவனுடைய அன்பை அனுபவித்த மான்மின் அங்கத்தினர்களுடைய சாட்சிகள் இடம்பெறுகின்றன.

*மான்மின் நியூஸ்* எண்ணற்ற ஆத்துமாக்களை உலகத்திலிருந்து இரட்சிப்பின் பாதைக்கு வழி நடத்தியுள்ளது. ஜூலை 2014ல், இந்தியாவிலுள்ள சகோதரி விஜயலட்சுமி மான்மின் நியூஸ் தமிழ் பதிப்பை தன்னுடைய அண்டைவீட்டாரிடமிருந்து பெற்று படித்தாள். அவள் ஒரு இந்துவாக இருந்தாலும் அதிலுள்ள வார்த்தைகள் அனைத்தும் உண்மை; தேவன் ஜீவனோடிருக்கிறார் என்று நினைத்தாள். மேலும் அவள் தன்னுடைய இருதய விருப்பங்களுக்கும் பதிலைப் பெற்றுக் கொண்டாள். ஆகவே அவள் சென்னை மான்மின் சபைக்கு வந்து, சபையில் செய்திகளை கேட்க ஆரம்பித்தாள். அவள் அறிவர். லீ அவர்களின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தை பெற்றுக்கொண்ட பின், தன்னுடைய வீடு சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு தீர்வைப் பெற்றாள்; கடனையும் அடைத்தாள். அவளுடைய மகன் தோல் வியாதியிலிருந்து சுகமடைந்தான்.

அவள் கிறிஸ்தவத்திற்கு மாறினாள்; அவளுடைய கணவனும் சபைக்கு வருகிறார். இதற்கு முன்பு ஒருபோதும் அனுபவித்திராத, உணராத சந்தோஷத்தை கர்த்தருக்குள் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்களையும் சேர்த்து, *மான்மின் நியூஸ்* மூலமாக அதிக எண்ணிக்கையிலான மக்கள் தேவனை சந்தித்து, அவரை அனுபவித்து, புதிய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள்.

க்வாங்ஜூ மான்மின் சபையிலுள்ள மூத்த கண்காணியை ஹியுன்யங் பார்க், "நான் வீட்டிற்குச் செல்வதற்காக பேருந்து நிலையத்தில் நின்றுக் கொண்டிருந்தபோது, ஒரு பெண்மணி தன்னுடைய கைகளில் *மான்மின் நியூஸை* வைத்திருந்தார்கள். அவள் அதை என்னிடம் கொடுத்து, அதைப் படிக்கும்படி சொன்னாள். கொடுமையான உலகத்தில் வேதனைப்பட்டு கொண்டிருந்த எனக்கு நேராக நீட்டப்பட்ட கர்த்தருடைய கரம் அது என்று நான் இப்போது அறிந்துகொண்டேன்" என்றாள்.

அவள் பின்நாட்களில் அறிவர். ஜேராக் லீ அவர்களின் மரணத்திற்கு முன் நித்திய வாழ்வை ருசித்தல் என்னும் சாட்சிப் புத்தகத்தை வாசித்து, அவருடைய சிலுவையின் செய்தி என்னும் பிரசங்கத் தொடர்களை கேட்க ஆரம்பித்தாள். அதன்பிறகு அவள் திரளான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டாள்; அவள் இருதய நோய் மற்றும் வயிற்றுப் பிரச்சனைகளிலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொண்டாள். இப்பொழுது அவள் கவலைகளே இல்லாத கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கிறாள். அவளும் *மான்மின் நியூஸை* மற்றவர்களுக்கு கொடுத்து கர்த்தருடைய அன்பை பகிர்ந்துகொள்கிறாள்.

சபையின் அநேக அங்கத்தினர்கள் *மான்மின் நியூஸை* நன்றாய் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் அதிலுள்ள ஜீவனுள்ள வார்த்தைகளை நினைத்து ஜெபிக்கிறார்கள். செய்தித்தாளில் வெளிவரும் சாட்சிகள் அவர்களுடைய விசுவாசத்தையும் அதிகரிக்கிறது.

கண்காணியை இவாமோட்டோ, "அநேக விதங்களில் *மான்மின் நியூஸ்* மூலம் நான் லாபத்தைப் பெற்றிருக்கிறேன். மற்றவர்களுக்கு நான் நற்செய்தியை அறிவிக்கின்றபோது, செய்தித்தாளிலுள்ள சாட்சிகள் மிகவும் பிரயோஜனமாக இருக்கின்றன. நானும்கூட ஏதாவது சோதனைகளை சந்திக்கும்போது, நான் வாசித்த சாட்சிகளை நினைக்கிறேன்; அதனால் அச்சோதனைகளை நான் விசுவாசத்தோடு மேற்கொள்ள முடிகிறது. நன்றாய் ஒழுங்குச் செய்யப்பட்ட பிரசங்கங்கள் மிகவும் பிரயோஜனமானதாகவும், விலையேறப்பெற்ற ஜீவ அப்பமாகவும் இருக்கின்றன. நான் செய்தித்தாளில் வெளிவரும் பத்திகள், சாட்சிகள் மற்றும் சபையின் செய்திகளை என்னுடைய முகப்புத்தக கணக்கில் பதிவேற்றம் செய்கிறேன். அவைகள் மிகவும் நல்ல விமர்சனங்களை பெறுகின்றன" என்று கூறினார்.

*மான்மின் நியூஸை* எபிரெயத்தில் மொழிபெயர்க்கிற லீனா டாபஹ் (இஸ்ரேல்) கூறியதாவது, "நான் ஜீவனுள்ள வார்த்தைகள் மூலமாக நல்லதொரு கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதற்கான அத்தியாவசியமான, விசேஷமான குறிப்புகளை கற்றுக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவர். லீ அவர்களின் நேரத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்ட கிரியைகளை வெளிப்படுத்துகிற ஜெபத்தின் மூலமாக என்னுடைய மகன் தேவனுடைய சுகமாகுதலின் கிரியைகளை அனுபவித்ததை நான்தானே கண்ணாரக் கண்டதினால், செய்தித்தாளில் வெளிவரும் சாட்சிகள் என்னுடைய இதயத்தை தொடுகின்றன."

*மான்மின் நியூஸ்* 32 மொழிகளில் வெளிவருகிறது – கொரியா, ஆங்கிலம், சீனம், பாரம்பரிய சீனம், ரஷ்யம், ஸ்பெனிஷ், டகலாக், ஜப்பானியம், பிரன்சு, இந்தி, தமிழ், போர்ச்சுகீஸ், டச்சு, டானிஸ், ஃப்னிஸ், எஸ்டோனியம், பல்கேரியம், உக்ரானியம், எபிரெயம், உருது, தாய், வியட்னாமியம், மங்கோலியம், இந்தோனேஷியம், விஷ்யம், பர்மிஷ், ஸ்வீடீஸ், அராபிக், நேபாளம், ஜெர்மனியம், இத்தாலியம் மற்றும் சிங்களம் போன்றவையாகும். இவை பரிசுத்த சுவிசேஷம் மற்றும் வல்லமையான கிரியைகள்மீது வாஞ்சையோடு இருக்கிற உலகமெங்கிலும் இருக்கிற பல சபைகள் மற்றும் போதகர்களால் பயன்படுத்தப்படுகிறது.

நேபாளில் உள்ள போதகர் கிரேஸ் லீ, "நான் *மான்மின் நியூஸை* சாலைகளில் செல்லும் மக்களுக்கு தருகிறேன். மேலும் போதகர்களுக்கும், நம்முடைய கிளை சபைகளுக்கும் கொடுக்கிறேன். மற்ற சபைகளின் விசுவாசிகள் அல்லது கிறிஸ்தவரல்லாதவர்கள் சில சமயம் எங்களைத் தொடர்புகொண்டு தங்களுடைய ஆர்வத்தை தெரிவிக்கின்றனர். என்னுடைய அங்கத்தினர்கள் *மான்மின் நியூஸை* நேசிப்பதை நான் பார்க்கையில் மிகுந்த சந்தோஷமடைகிறேன்" என்று கூறினார்.

*மான்மின் நியூஸ்* மே 17, 1987 அன்று "*மான்மின் ஜூங்ஆங் நியூஸ்*" என்ற பெயரில் முதல் முதலாக வெளியீடப்பட்டது. அக்டோபர், 2009 அன்று அது "*மான்மின் நியூஸ்*" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அது இணைய வடிவ மற்றும் காகித வடிவ பதிப்பின்மூலம் புத்தக வெளியீட்டு ஊழியத்தில் ஒரு முக்கிய பங்கு வகித்துக்கொண்டு வருகிறது. *மான்மின் நியூஸ்* குழுவானது உலகமெங்கிலும் இருக்கிற கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளிலிருந்து கிருபை நிறைந்த செய்திகளையும், சாட்சிகளையும் துரிதமாய் பெறுவதற்காக கொரியாவின் அனைத்துப் பகுதிகள் மற்றும் உலகமெங்கிலும் அதனுடைய பணியாளர்களை ஏற்படுத்தியுள்ளது. *மான்மின் நியூஸ்* உலகத்திலுள்ள எதுவும் கொடுக்க இயலாத உண்மையான ஜீவனையும், சந்தோஷமான செய்திகளையும் தந்து, வாசகர்கள் தங்களுடைய விசுவாசத்தை அதிகரித்து, மிகுந்த மகிழ்ச்சியையும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை அனுபவிக்கவும் நம்பிக்கையை அளிக்கிறது.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது" (1யோவான் 1:5)

# பூரண நற்குணத்தைப் பண்படுத்துவதற்கு

பொதுவாக, யாராவது தங்கள் கடின உணர்வை அடக்கிக் கொள்வதை மக்கள் பார்க்கும்போது, அவர் ஒரு நல்ல நபர் என்று நினைப் பார்கள். ஆனால் தேவனுடைய பார்வையில் இது பூரண நற்குணம் அல்ல. தேவனால் அங்கீகரிக் கப்படுகிற நற்குணமாவது நமக்குத் தீமை செய்கிற மக்களுக்கு நேரே எந்த ஒரு கசப்புணர்வுமில்லாமல் இருப்பது. மேலும் அவர்கள் இருதயத்தை நல்ல வார்த்தைகள் மற்றும் கிரியைகளால் அசைப்பது மாயிருக்கிறது. கூடுதலாக, நம்முடைய சத்துருக் களுக்கும் நம் உயிரையும் கொடுக்கக்கூடிய பூரண நற்குணத்தை நாம் பண்படுத்த வேண்டு மென தேவன் விரும்புகிறார்.

அப்படியானால், தேவனுடைய பிள்ளைகளாக பூரண நற்குணத்தை அடைவதற்கு வேண்டிய மூன்று பரிசோதனை குறிப்புகளை நாம் பார்ப்போம்.

**1. நீங்கள் மற்றவர்களுக்கு ஜீவனைக் கொடுக்க முயற்சிக்கிறீர்களா அல்லது அவர்களை ஒடுக்குகிறீர்களா என்பதை பரிசோதிக்க வேண்டும்.**

யோவான் 6:63ல், "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்று வாசிக்கிறோம். ஆவி உயிர் கொடுக்கிறது. ஆவியினால் அவர்களை நிரப்பும்படியாக மற்றவர்களுக்கு அது பெலன் கொடுத்து, அவர்களை மாற்றி நித்திய ஜீவனைப் பெறச் செய்கிறது.

இயேசு நெரிந்த நாணலை முறியாதவரும் மங்கியெறியும் திரியை அணையாதவருமானவர். அவர் மக்களின் தீமையை வெளிப்படுத்தவில்லை; விபச்சாரம் செய்த ஸ்தீரி; அவரை காட்டிக்கொடுத்து விற்ற யூதாஸ்காரியோத்து; அல்லது அவரை எப்போதுமே தாக்க முயற்சித்த பரிசேயர் மற்றும் சதுசேயர்கள். அவர் அவர்களுக்கு வாழ்வளிப்பதற்கு ஒரு வழியை திறக்க முயற்சித்தார். இதுதான் ஆண்டவரின் நல்ல இருதயம்.

மறுகையில், நல்ல இருதயமில்லாதவர்கள் நெரிந்த நாணல் பார்ப்பதற்கு நன்றாய் இல்லாத காரணத்தால் அதை அப்படியே முறித்துவிடுவர். மங்கியெரிகிற திரி புகையையும் சூட்டையும் உருவாக்குவதை தவிர்க்க அவர்கள் அதை அணைத்து விடுவர். அவர்கள் இப்படிச் செய்வதற்கு தங்களது சொந்தக் கருத்துக்களை வலியுறுத்தி மற்றவர்களை அலட்சியம் செய்து ஒடுக்குவர்.

நீங்கள் உங்கள் கடமைகளைச் செய்யும்போது, வித்தியாசமான குணாதிசயங்களுடைய மக்கள் பலரைச் சந்திக்க நேரும். அப்போது நீங்கள் அவர்களுக்கு வாழ்வு கொடுக்க தெரிந்துக் கொள்கிறீர்களா அல்லது உங்களது சொந்தக் கருத்துக்களுடன் அவர்களை ஒடுக்குகிறீர்களா? உதாரணமாக உங்களுக்கு ஒரு கூட்டம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒரு அங்கத்தினர் அடிக்கடி உங்கள் கருத்துக்களை எதிர்க்கிறார். இங்கு நீங்கள், "அவள் எப்பொழுதும் என் கருத்துக்களை எதிர்க்கிறாள். அவள் என்னை தரக் குறைவாய் பார்க்கிறதாலோ?" என்று நீங்கள் நினைத்து அசௌகரியமாக உணரலாம். அதனால் அவளது கருத்துக்களை நன்கு கேட்காமலேயே உடனடியாக நீங்கள் அதைப் புறக்கணித்து விடுவீர்கள்.

மேலும், உங்கள் இருதயத்தில் நீங்கள் நற்குணத்தை பண்படுத்தாமலிருந்தால், நீங்கள் வாழ்வு கொடுப்பது போல நடிக்கையில் மற்றவர்களை ஒடுக்க முயற்சிப்பீர்கள். உதாரணமாக, வித்தியாசமான குணாதிசயங்கள் காரணமாக சபை பணியாளர்களில் ஒருவருடன் அடிக்கடி உங்களுக்கு வாக்குவாதம் ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். ஒரு நாள், உங்களது மாகாணப் போதகர் அந்தப் பணியாளரைப் பற்றி உங்களிடம், "அவள் எப்படி இருக்கிறாள்?" என்று வினவுகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

நீங்கள் எந்த ஒரு தாமதமும் இல்லாமல், "போதகரே, நான் அவளைக் குறித்து தான் உங்களிடம பேச வேண்டுமென நினைத்திருந்தேன். அவளுக்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அவள் ஜெபக்கூடுகையை தவறவிடுகிறாள். எப்போதும் பிறருடன் வாக்குவாதம் செய்கிறாள். அதனால் அவளைச் சுற்றியுள்ள மக்கள் அவளால் கஷ்டமான நேரத்தை அனுபவிக்கின்றனர். அது அவளுக்கும்கூட கஷ்டமாக இருக்கலாம். போதகரே, தயவாக அவளுக்கு உதவுங்கள்" என்று பதிலளிக்கிறீர்கள். உண்மையில், நீங்கள் தான் அவளோடு வாக்குவாதத்தில் இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அதை உங்கள் மேல் பழிசாட்டிக் கொள்ளாமல் அவளை மட்டும் பழி சாட்டி மற்றவர்களைக் குறித்தும் பேசுகிறீர்கள்.

இந்த நிலையில், நீங்கள் மாகாணப் போதகர் அவளை ஒடுக்கி மாற்ற வேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் இப்பேற்பட்ட விருப்பத்தை உணராவிட்டால், நீங்கள் மற்றவர்களைக் குறித்த கரிசனையில் நற்குணத்தின் வார்த்தைகளைப் பேசியுள்ளேன் என்று தவறாக நினைத்துவிடுவீர்கள். ஆகவே உங்களது வார்த்தைகளும், செயல்களும் மற்றவர்களுக்கு வாழ்வு கொடுப்பதற்காகவா அல்லது அவர்களை உங்களிடத்திற்கு பணிய செய்வதற்காகவா என்பதை நீங்கள் பரிசோதிக்க முடியும் என நான் நம்புகிறேன்.

**2. தேவனுடைய மகிமைக்காக வேலை செய்கிறேன் என்று சொன்னாலும் நன்மதிப்புகளை எடுத்துக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா என்பதை நீங்கள் பரிசோதியுங்கள்.**

1 கொரிந்தியர் 10:31 சொல்கிறது, "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." விசுவாசமுள்ளவர்களாய் இருப்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்காக வேலை செய்வதற்கும், அவரை மகிமைப்படுத்துவதற்கும் பெலனைப் பெற்றுக்கொள்ள புசித்து தூங்குவர். அவர்களுக்கு இப்படிப்பட்ட இருதயம் இருந்தால், தேவன் அவர்கள் புசித்து தூங்க மட்டுமே செய்தாலும்கூட அவர்களது தூபத்தை ஏற்றுக் கொள்வார்.

இருப்பினும் சில மக்கள் வெளிப்புறத்தில் கடினமாக உழைப்பர். ஆனால் உட்புறமோ அவர்கள் தங்கள் சொந்த மகிமையைத் தேடுவர். அதனால் அவர்களால் எந்த ஒரு பரலோக வெகுமதிகளையும் பெற இயலாது.

உங்களது சேவையின் கடமை, தேவையுள்ளவர்களுக்கு உதவுதல், பிரசங்கித்தல், மற்றும் ஆத்துமாக்களைப் பராமரித்தல் ஆகியன விலையேறப்பெற்ற கடமைகளாகும். உங்களது கடின உழைப்பின்மூலமாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படும்போதும் உங்கள் மூலமாக எழுப்புதல் உண்டாகும்போதும், நீங்கள் தேவனுக்கு மகிமை செலுத்துவீர்கள். ஆவியிலும் சரீரத்திலும்கூட ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள். ஆனால் மதிப்புகளை நீங்கள்தானே எடுத்துக்கொள்ள விரும்புகிறீர்களா அல்லது இல்லையா என்பதை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளும்படியாக உங்களை ஊக்குவிக்கிறேன்.

நீங்கள் இரட்சிப்புக்குள் நடத்த வேண்டிய ஒருவர் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். நீங்கள் அவளுக்காக உபவாசம் மற்றும் ஜெபத்தை ஏறெடுக்கிறீர்கள். சில சமயம் அவளுக்குத் தேவையானவைகளைக் கொடுத்து அர்ப்பணத்தோடு சேவை செய்துள்ளீர்கள். இறுதியாக அவள் தன் மனதை திறந்து திருச்சபைக்கு வருகிற நிலையில் இருக்கிறாள். ஆனால் ஒருநாள், திருச்சபையிலுள்ள மற்றொருவர் அவளை சபைக்கு அழைத்து வந்து அவளை தான் அழைத்து வந்ததாக பதிவு செய்தால், "எப்படி அவள் இப்படிச் செய்யலாம்? நான் அவளை சபைக்கு அழைத்து வர எப்பாடுபட்டு முயற்சித்தேன் என்பது அவளுக்கும் தெரியும். ஆனால் அவள் மதிப்பை எடுத்துக் கொண்டாளே" என்று நினைத்து கஷ்ட உணர்வடைவீர்களா என ஆராயுங்கள். உங்களுக்கு நற்குணம் இருந்தால் நீங்கள் அப்படி நினைக்கமாட்டீர்கள்.

இன்னும் ஒரு உதாரணம் உங்களுக்கு நான் தரட்டும். ஒரு சிறுகுழு தலைவர் தனது குழுவில் சிறப்பானதை செய்துள்ளார். அதனால் அங்கு எழுப்புதல் உண்டாகி அங்கத்தினர்களது விசுவாசம் பெருகியது. ஒரு நாளில், அவளது சிறுகுழு பகுக்கப்பட்டு, அதிலிருந்து ஒரு பகுதி மற்றொரு செல்குழு தலைவி ஒருவருக்கு பொறுப்பாக கொடுக்கப்படும்போது, நீங்கள் தேவனுடைய மகிமையை மட்டும் தேடி ஆத்துமாக்களைப் பராமரிப்பீர்களானால், நீங்கள் யோசித்து என்ன செய்வீர்கள்? நீங்கள் புதிய தலைவியுடன் அங்கத்தினர்கள் பழக உதவி செய்வீர்கள். மாறாக, "இது என் கனி. நான் கடின உழைப்போடு வளர்த்தேன். என் வேலை வீணாகிவிட்டது. என் சிறுகுழு சிறியதாகி விட்டதே" என்று எண்ணி உங்களுக்கு ஏதாகிலும் சலிப்பு இருக்குமேயானால், அது நீங்கள் உங்கள் சுயமகிமையை தேடுகிறீர்கள் என்று அர்த்தப்படும்.

நீங்கள் உங்கள் சுயமகிமையை தேடினால், உங்களது உண்மைத்தன்மை எந்த நேரத்திலும் மாறிவிடும். உங்களுக்கு கனிகள் சீக்கிரமாக இல்லையென்றால், உங்களது விளைந்த நற்கனிகளுக்கு உங்களால் மதிப்பை பெற முடியவில்லையென்றால், பின் நீங்கள் சோர்ந்துபோய் விடுவீர்கள். உங்களது வாஞ்சை குறைந்துப்போம். நீங்கள் உங்கள் மகிமையை தேடாமல் பரிபூரணமாக தேவனுடைய மகிமையை மட்டுமே தேடுவீர்கள் என நான் நம்புகிறேன். அப்போது தான் உங்களது உண்மை நித்திய வெகுமதியாகவும் மகிமையாகவும் கையளிக்கப்படும்.

**3. நீங்கள் மற்றவர்களை பராமரிக்கிறீர்களா அல்லது மற்றவர்கள் உங்களை பராமரிக்க வேண்டும் என விரும்புகிறீர்களா என்பதை நீங்கள் பரிசோதிக்க வேண்டும்.**

அப்போஸ்தலர் 20:35 சொல்கிறது, "வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பது உத்தமம்." நீங்கள் உங்கள் கடமைகளை நிறைவேற்றுகையில், இயல்பாக நீங்கள் வாங்குவதைப் பார்க்கிலும் கொடுக்க முயற்சிப்பீர்கள். பெலவீனமான ஆத்துமாக்களையும் பிரச்சனையுள்ளவர்களையும் உங்கள் சொந்த குடும்பத்தைப் பராமரிப்பது போல நீங்கள் பராமரிப்பீர்கள். ஆனால் ஆவியின் நிறைவு ஒரு க்ஷணம் குறைந்துப் போகுமேயானால் நீங்கள் பெற வேண்டும் என ஆசைக் கொள்வீர்கள்.

"நான் கடினமாக உழைத்துக் கொண்டிருந்தாலும், எப்படி நான் எந்த ஒரு ஆசீர்வாதங்களையும் பெறாமல் இருக்கிறேன்" என்று நீங்கள் நினைக்கலாம். "நான் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக உழைக்கிறேன். ஆனால் அதையெல்லாம் யாருமே அறியவில்லையே" என்று நினைக்கும் உங்கள் மாம்சீக சிந்தை தொடர்ந்து அதிகமாகிறது. முன்பு ஆத்துமாக்களை குறித்து எப்போதும் அதிகம் கவலைப்பட்ட நீங்கள் தற்போது உங்கள் சொந்தப் பிரச்சனைகளைக் குறித்தே அதிகம் நினைக்கிறீர்கள்.

நீங்கள், "மாகாணப் போதகர் எனக்காக ஜெபிக்கிறாரா? மற்றவர்கள் பாடுகளின் வழியாக கடந்துச் சென்றபோது, அவர் அவர்களை அடிக்கடி சந்தித்தார். அவர்களுக்காக உபவாசம்கூட இருந்தார். ஆனால் அவர் எனக்காக உண்மையில் எதுவும் செய்யவில்லை!" என்று நினைக்கலாம். மற்றவர்கள் உங்களிடம் அதிக உண்மையுள்ளவர்களாய் இருங்கள் என்று ஆலோசனைச் சொல்லும்போது நீங்கள் மோசமாக உணர்ந்து, "அவர்கள் என் சூழ்நிலைப் புரியாமல் என் தவறை சுட்டிக் காட்ட முயற்சிக்கிறார்கள்" என்று நினைப்பீர்கள்.

நீங்கள் திருச்சபையில் தலைவராக பணியாற்றி நற்குணத்தின் செய்திகளை நீண்ட காலம் கேட்டிருந்தாலும்கூட, நீங்கள் நற்குணத்தை உங்களில் பண்படுத்தாமல் இருந்துகொண்டு வந்தால், இறுதியாக உங்கள் இருதயம் வெளிப்படும். அதாவது மற்றவர்களுடைய மனதைப் பற்றிக் கரிசனைக் கொள்ள முயற்சிக்காமல் மற்றவர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உங்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென விரும்புவீர்கள்.

இயேசு தாம் பாவமற்றவராய் இருந்தாலும், அவர் சிலுவையில் தொங்கினார். இருப்பினும்கூட அவருக்கு இருந்த வேதனையைப் பற்றி அவர் புலம்பவில்லை. அவர் துக்கப்பட்டுக் கொண்டிருந்த தேவனுடைய இருதயத்தைத் தேற்றி மீதம் இருக்கப் போகிற ஆத்துமாக்களுக்காக ஜெபித்தார். நீங்கள் உங்களுடைய வேதனைகளைப் பார்க்க முயற்சிக்கும் போது மட்டுமே உங்களால் பூரண ஆவிக்குள்ளாக செல்ல முடியும். நீங்கள் மற்றவர்களுடைய இருதயங்களைப் புரிந்துக்கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே தேவன் பூரண ஒளியாயிருக்கிறார். அவரில் யாதொரு தீமையும் வேற்றுமையான நிழலும் இல்லை. மேலும் அவர் பூரண சற்குணராய் இருப்பதுபோல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பூரண சற்குணராய் மாற வேண்டும் என விரும்புகிறார். உங்களது இருதயம், வார்த்தைகள் மற்றும் கிரியைகளைப் பரிசோதிக்கும்படி உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன். இப்படிச் செய்வதால் சுயநீதியின் அறிவிலிருந்து வருகிற மாம்சீக நற்குணத்தை அல்ல, பூரணமான நற்குணத்தை நீங்கள் பண் படுத்தும்படியாக ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

## விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

நான்காவது பக்கத்தின் தொடர்ச்சி

கண்காணியை வெர்ஜினியா, அயல்நாட்டவர் பணித்தளம், D.R.காங்கோ
மான்மின் செய்திகள் எண் 102ல் சாட்சி கொடுத்தவர்

## “சுகமாக்கப்பட்ட என்னுடைய தாயை குறித்து நினைக்கையில் சந்தோஷப்படுகிறேன்”



2002 கோடையில், நான் மிக சோகமான ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன். பாரிஸ், பிரான்ஸில் வாழ்ந்து வந்த என் தாய்க்கு இரத்தப் புற்றுநோய் உள்ளது என கண்டறியப்பட்டது. அவர்கள் மருந்துகளை எடுத்து சுகமாகும்படி பல வழிகளில் முயற்சித்தார்கள். ஆனால் அது மோசமாகிக் கொண்டிருந்தது. அவர்களால் நன்கு சாப்பிட முடியவில்லை. அடிக்கடி வாந்தி எடுத்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் சீக்கிரத்தில் பெலவீனமாகி விட்டார்கள். 100 கிலோவிலிருந்து 38 கிலோவாக எடை குறைந்துவிட்டார்கள். இறுதியாக அவர்கள் தங்களைத் தான் மரணத்திற்கு ஆயத்தப்படுத்தி தங்களது கடைசி விருப்பத்தையும், விலைமதிப்புள்ளவைகளையும் கொரியாவிற்கு அனுப்ப ஆயத்தமாகத் துவங்கினார்கள்.

மே 2004ல், நான் அறிவர். ஜேராக் லீ அவர்களது சிறப்பு எழுப்புதல் கூட்டத்தில் பங்குப் பெற்று என் தாயினுடைய புகைப்படத்தின்மேல் அவரது ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். அதன்பின் அவர்களுக்காக நான் விசுவாச கிரியைகளை சேர்த்து வந்தேன். 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில், என் தாயார் பெலனடைந்து எடை கூட ஆரம்பித்தார்கள். அது ஒரு அற்புதம்! ஜூன் 2007ல், அவர்களது பரிசோதனை முடிவுகள் புற்றுநோய் செல்கள் எதுவும் இல்லை எனக் காட்டியது. ஹலேலூயா!

2015 ஆகஸ்டு வரை, எனது தாயார் இன்னும் ஆரோக்கியமாக உள்ளார் (வலது). மான்மின் மத்திய சபையின் ஆராதனைகளில் இணையதளம் மூலமாக பங்குபெறுகிறார்கள். அவர்கள் அறிவர் லீ அவர்களது புத்தகங்கள் மற்றும் *மான்மின் நியூஸ்* மூலமாக அதிகமான கிருபைப் பெற்றார்கள். சுகமாகி அமைப்பை காத்துக்கொள்ளும் என் தாயாரைக் குறித்து நினைக்கும் போதே நான் சந்தோஷத்தை உணர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அதிலிருந்து, எனது விசுவாசம் அதிகரித்து சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்வு நான் நடத்தி வருகிறேன். இப்போது நான் ஞாயிறு மாலை ஆராதனையை பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்து வருகிறேன். பிரஞ்சு பேசுபவர்களுடன் மாகாணப் போதகர்கள் பேசுவதற்கு உதவி வருகிறேன். தம்முடைய அன்பான பிள்ளைகளுக்கு எப்போதும் சிறந்த காரியங்களைக் கொடுக்கிற தேவனுக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் ஏறெடுக்கிறேன்.



கண்காணி சிட்டிபாபு, சென்னை மான்மின் சபை,
மான்மின் செய்திகள் எண் 263ல் சாட்சி கொடுத்தவர்

## “என்னுடைய குடும்பம் தேவனுக்காக உண்மையாய் பணிபுரிகிறது”



நான் ஆண்டவரை ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக, நான் மதுபானம் மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமையாயிருந்தேன். எனது குடும்ப அங்கத்தினர்கள் என்னைப் பார்த்து பயந்தனர். ஒவ்வொரு நாள் இரவும் குடி வெறிகொண்டு, எனது மனைவி மற்றும் மகன்களை கத்தியோடு கொன்று விடுவேன் என்று மிரட்டி அவர்களை அடித்தேன். ஆனால் நான் மதுபானம் குடிக்காவிட்டால் எனக்குப் பயங்கரமாக தலை வலித்து எனது கைகளெல்லாம் நடுநடுங்கிவிடும். அதனால் என்னால் அதைக் குடிக்காமல் இருக்க முடியவில்லை.

அதனால் என்நிமித்தம் (இடது, பின்புறம்) எனது குடும்ப அங்கத்தினர்கள் மனரீதியாக கஷ்டப்பட்டனர். அவர்கள் சரீரத்திலும் வியாதியோடு இருந்தனர். எனது மனைவிக்கு தைராய்டு மற்றும் இருதய வியாதிகள் இருந்தன; சுவாசக் கோளாறும் இருந்தது; அவளுக்கு அடிக்கடி நீர் வெளியேறும் வியாதியும் இருந்தது. என் மூத்த மகனுக்கு தலைவலியும், மோசமான கண்பார்வையும் இருந்தது. எனது இரண்டாவது மகனுக்கு தூக்க கேடு வியாதி இருந்ததால் இரவில் எழுந்து நடந்துக் கொண்டிருந்தான்.

ஆனால் நவம்பர் 2007ல், நான் சென்னை மான்மின் திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டேன். 20 வருடங்களாக இருந்த மதுபான அடிமைத்தனத்திலிருந்தும், பத்து வருடங்களாக இருந்த போதை வஸ்து அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலைப் பெற்றேன். எனது மனைவியும் மகன்களும் அவர்களது வியாதிகளிலிருந்து சுகம்பெற்றனர். பிற்பாடு, என் வாழ்க்கை ஒரு புதிய அத்தியாயத்தை திருப்பியது. நான் தொடர்ந்து விசுவாச வாழ்வு நடத்தி பணம் சம்பாதிப்பதற்கு ஆட்டோ ஓட்டிக் கொண்டு இருக்கிறேன். நான் சந்தோஷமாக இருக்கிறேன். என்னுடைய குடும்ப அங்கத்தினர்களும்கூட சந்தோஷத்தை உணர்கின்றனர்.

2014 ஆம் ஆண்டு பிற்பகுதியில், இந்து வழிபாடு செய்துக் கொண்டிருந்த என் தகப்பனையும், என் சகோதரருடைய குடும்பத்தையும் திருச்சபைக்கு வழிநடத்தினேன். நாங்கள் சேர்ந்து கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கிறோம். எத்தனை நன்றி!

எனது குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் திருச்சபை பணியாளர்களாய் பணிபுரிகிறோம். நான் புருஷர்கள் பணித்தளத்தின் தலைவர்; என் மனைவி பெண்கள் பணித்தளத்தின் தலைவி, சிறுவர் ஞாயிறு பள்ளியின் ஆசிரியை மற்றும் பாடல்குழுவில் ஒரு உறுப்பினர்; என் மூத்த மகன் இளம்வாலிபர் பணித்தளத்தின் பாடல் குழுவில் இருக்கிறான்.

ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்படிக்கு ஆசீர்வதித்து ஆவியிலும் சரீரத்திலும் மிகப்பெறும் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளச் செய்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

கண்காணி சியோக்கியோன் கிம், மாசான் மான்மின் திருச்சபை
மான்மின் செய்திகள் எண் 297ல் சாட்சிகொடுத்தவர்

## “சோதனைகள் மற்றும் கஷ்டங்கள் அனைத்தும் எனக்காக ஆண்டவருடைய அன்பாய் இருந்தன”

நான் சிறுவனாய் இருந்தபோது, எனக்குப் பணத்தைக் குறித்தோ அதை எப்படி நிர்வாகிப்பது என்பதைக் குறித்தோ தெரியாது. ஆனால் நான் முழுவதும் உத்வேகத்துடனும் ஆசையுடனும் இருந்தேன். நான் அநாவசியமாக கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தி, மற்றவர்களுக்கு உத்தரவாதமாக நின்று, என்னுடைய சுய தொழிலையும் ஆரம்பித்தேன். நான் பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்தேன்.

2001ல், எனக்கு திருமணம் ஆன பிற்பாடும்கூட எனக்கு அப்போது இருந்த கடன்களை அடைக்கும்படிக்கு கிரெடிட் கார்டு லோன் வாங்கி அதைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்தேன். ஆனால் அது மிகப் பெரும் கடனுக்கே என்னை வழிநடத்தியது. நான் என் வேலையை விட்டு ஓய்வூதியத்தின் மூலமாக என் கடன்கள் சிலவற்றை அடைத்தேன். மேலும் அதிக பணம் சம்பாதிக்க நான் சுயதொழில் ஒன்றை ஆரம்பித்-தேன்; ஆரோக்கியமான உணவு கடை ஒன்றை ஆரம்பித்தேன்.

அது நன்றாக நடந்தது, நல்ல நிலையை அடைந்தது. அதன்பின் நான் மீண்டுமாய் பங்குச் சந்தையில் முதலீடு செய்து, மீண்டுமாய் பெருங்கடனுக்குள்ளானேன். 2008 நவம்பரில், என் கடையை சுற்றியிருந்த கட்டிடத்தில் தீ பிடித்தது. பக்கத்துக்கடை எறிந்து போயிருந்தது. ஆனால் என் கடைக்கு எதுவும் ஆகவில்லை என்பது ஆச்சரியம். அடுத்த கடை என் கடையிலிருந்து 8 செ.மீ. தூரத்தில் உள்ளது. ஆனால் தேவன் என் கடையைப் பாதுகாத்தார்.

இந்நிகழ்வு நான் என் ஜீவியத்தை திரும்பிப் பார்த்து என்னை மனந்திரும்ப வைத்தது. தேவன் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் மூலமாக ஆசீர்வாதங்களின் திறவுகோல்களை குறித்து எனக்குக் கற்பித்திருந்தாலும், நான் அவைகளை அலட்சியம் செய்து பேராசையோடு நான் விரும்பியவாறு வாழ்ந்து வந்தேன். நான் இவைகளை எல்லாம் அறிக்கைச் செய்தேன். அதன்பின் சியோல் ஜூங்ஆங் அசெட்டின் மாசான் கிளையில் எனக்கு ஒரு வேலை கிடைத்தது. நான் விலையேறப்பெற்ற சோதனைகளை கடந்து வந்ததால், நான் தேவையுள்ளவர்களுக்கு உதவ விரும்பினேன்; தேவனுடைய ராஜ்யத்திற்காய் என்னுடையவைகளைக் கொடுத்தேன்.

பின்னர் அன்பின் தேவன் என்னை ஆசீர்வதித்தார். முதல் மாதத்தில், கம்பெனியில் எனது விற்பனை திறன் காரணத்தினிமித்தம் நான் இரண்டாம் இடம் பெற்றேன். ஒரு வருடத்தில் நான் என் கடனையெல்லாம் அடைத்துவிட்டேன்; பதவி உயர்வும் பெற்றேன். நான் அதிகமாக தேவனுக்கு கொடுக்க கொடுக்க நான் அதிகமதிகமாக ஆசீர்வாதம் பெற்றுக் கொள்கிறேன்.

மே 2015ல், எனது இருதயத்தின் ஆழத்திலுள்ள தீமையை கண்டறிந்து, ஆவியின் இருதயத்தைப் பெற கடுமையாய் போராடும் வாய்ப்பை பெற்றேன். என்னுடைய ஐந்து வயது மகன் ஜூஹுனுக்கு நிமோனியா இருந்தது கண்டறியப்பட்டது. அவன் ஏழு நாள் உயரிய காய்ச்சலால் கஷ்டப்பட்டான். அவனால் சாப்பிடவோ அல்லது தூங்கவோ முடியவில்லை. அவன் விநோதமான காரியங்களைச் சொல்லி நீர்ச்சத்தை இழந்தான். அவனுடைய உதடுகள் மிகவும் காய்ந்து இரத்தம் வடிந்தது. அவனது தொண்டை காய்ந்துபோகிற அளவுக்கு மிகவும் இறுமினான். நிமோனியா அவனது வயிற்றிலிருந்து கணையம் மற்றும் பிற பகுதிகளுக்கும் பரவியது. அவனது உடலியலுக்குரிய அளவு இயல்பு நிலையைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகரித்தது.

என்னுடைய மனைவியும் நானும் உபவாசிக்க ஆரம்பித்தோம். நாங்கள் எங்களது வாஞ்சை குறைந்துப் போயிற்று என்றும், ஆவிக்குரிய ரீதியில் ஆணவம் பிடித்தவர்களானோம் என்பதையும் கண்டறிந்தோம். நான் அது என் தவறு என நினைத்தேன். அதனால் முற்றிலுமாக அறிக்கைச் செய்தேன். அதன்பின் உயரிய காய்ச்சல் போய்விட்டது. அவன் முற்றிலும் சுகமானான். அதன்பிற்பாடு, நான் தாழ்மையோடும் நன்றியோடும், அர்ப்பணத்தோடும் ஊக்கமாக ஓட ஆரம்பித்தேன். ஜூன் 2015ல் நான் ஆவியின் இருதயத்தை அடையும் பாக்கியம் பெற்றேன்.

எல்லாச் சோதனைகள் மற்றும் கஷ்டங்கள் ஆண்டவருடைய அன்பாக இருந்தது. நான் ஆவிக்குரிய மனிதனாகும் வரைக்கும் எனக்காக பொறுமையோடு காத்திருந்த தேவனுக்கு எல்லா நன்றியையும், மகிமையையும் செலுத்துகிறேன்.



# “ஆண்டவரை நான் சந்தித்தபிறகு என் வாழ்க்கை புதிதானது”

திரளான சாட்சிகள் *மான்மின் நியூஸின்* 700வது கொரிய பதிப்பு வரை வெளிவந்துள்ளது. நாம் சில சாட்சிகளை நினைகூர்ந்து, அந்த சாட்சியை கொடுத்தவர்கள் தற்போது தேவனுடைய கிருபையால் ஆசீர்வாதம் நிரம்பிய வாழ்க்கை வாழ்வதைப் பார்த்து, அவர்கள் மூலம் நாமும் தேவனை மகிமைப்படுத்துவோம்!

மூத்த கண்காணியை ஹியுன்சுக் ச்சோ, கானான் குழுவின் வழிநடத்தும் ஆசிரியர், பெண்கள் குழுவின் தலைவி, தென்கொரியா. 97வது கொரிய பதிப்பில் சாட்சி கொடுத்தவர்

## “தேவனுடைய மகிமைக்காக வாழ்வதால் நான் சந்தோஷமாய் இருக்கிறேன்”



1991ல், என்னுடைய இரண்டு வயது மகளுக்கு சுப்ராவென்ட்ரிகுலர் டச்சேகார்டியா (supraventricular tachycardia) என்றழைக்கப்படும் இருதய நோய் இருந்ததை நான் அறியநேர்ந்தது. இந்த நோய் முழுவதுமாக குணமாகிவிடாது என்றும், ஒருவேளை அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தாலும் அவளால் அதிகபட்சம் 18வயது வரை மட்டுமே வாழ முடியும் என்றும் எனக்குச் சொல்லப்பட்டது. 1993 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், என்னுடைய பக்கத்துவீட்டில் இருந்த ஒருவர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் “சிலுவையின் செய்தி” என்ற பிரசங்க ஒலிநாடாவை என்னிடத்தில் கொடுத்–தார். நான் அதைக் கேட்டபோது, மிகவும் நிம்மதியை உணர்ந்தேன். அந்த ஒலிநாடாவின் கடைசியில் அவருடைய ஜெபத்தை நான் பெற்றுக் கொண்டபோது, நான் புதினா சுவையுடைய ஒரு மிட்டாய் சாப்பிட்டால் எப்படியிருக்குமோ அதைப் போன்றதொரு குளுமையை என்னுடைய உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரையிலும் உணர்ந்தேன். அதன்பிறகு நான் என்னுடைய கண் வலி, மூக்கு ஒவ்வாமை மற்றும் எனக்கு கஷ்டத்தை கொடுத்த சிரங்குப் பிரச்சனையிலிருந்தும் நான் சுகமடைந்தேன்.

மே 3ம் தேதி 1993 அன்று, அறிவர். லீ அவர்களுடைய விசேஷித்த எழுப்புதல் கூட்டத்தில் பங்குப்பெறுவதற்காக நான் என்னுடைய மகளோடு கூட மான்மின் மத்திய சபைக்கு விரைந்து சென்றேன். நான் பிரசங்கத்தினால் அதிக கிருபையை பெற்றுக் கொண்டேன்; ஒவ்வொரு கூடுகையிலும் மனந்திரும்பி–னேன்; தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வேன் என்று என் மனதில் தீர்மானம் செய்தேன்.

மே 30,1993ல், என்னுடைய குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் சபையில் பதிவு செய்தோம். தலைமை போதகருடைய பிரசங்கத்திற்குப் பிறகு நோயாளிகளுக்கான அவருடைய ஜெபத்தை நாங்கள் பெற்றுக்கொண்டபோது, என்னுடைய மகள் அவளுடைய இருதய நோயிலிருந்து முற்றிலுமாக குணமானாள்; இப்பொழுது அவளுக்கு வயது 25, இன்னும் ஆரோக்கியமாக இருக்கிறாள். தேவன் தந்த கிருபைக்காக நானும் என்னுடைய கணவரும் ஆண்டவருக்காக ஊக்கமாக ஊழியம் செய்கிறோம். நாங்கள் சில சமயம் கஷ்டமான நேரத்தை சந்தித்தாலும், தலைமை போதகருடைய ஜீவனுள்ள பிரசங்கங்களை நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்தி, எங்களுடைய விசுவாசத்தை ஆராய்ந்து பார்க்கிறோம். எனவே அவையெல்லாம் எங்களுடைய ஆத்துமா செழிப்படைவதற்கான ஆசீர்வாதமாக மாறுகின்றது.

என் மகன் ஷியங்சியோல் சாங் உலக சிநேகிதர்களோடு உலகத்தில் அலைந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் மேய்ப்பருடைய அன்பை உணர்ந்தது முதற்கொண்டு, வேகமாக புதுப்பிக்கப்பட்டான். தற்சமயம் அவன் லேவி ஊழியனாகவும் (முழு நேர பணியாளர்), இளம் வாலிபர்கள் குழுவின் தலைவராகவும் சபைக்காக பணியாற்றுகிறான். என் மகள் போதகர் ஜியெங் சாங் போதகராய் மாறி, ஆண்டவரிடமிருந்து அவள் பெற்றுக்கொண்ட கிருபையையும் அன்பையும் மற்ற ஆத்துமாக்களுக்கு அறிவிக்கிறாள். என்னுடைய கணவர் மூப்பர் ஷியோக்கில் சாங் ஆண்கள் குழுவின் தலைவராகவும், முதலாவது இளம் வாலிபர்கள் குழுவின் வழிநடத்தும் ஆசிரியராகவும் இருக்கிறார். நான் பெண்கள் குழுவின் தலைவியாகவும், கானான் குழுவின் வழிநடத்தும் ஆசிரியராகவும் இருக்கிறேன்.

நாங்கள் மேய்ப்பரை சந்திக்காதிருந்தால் என்னுடைய குடும்பம் இந்த அளவிற்கு மாறியிருக்காது. நாங்கள் ஆவியின் இருதயத்தையும், பூரண ஆவியின் இருதயத்தையும் அடைபெறும்படி வழிநடத்தி, தேவனுடைய மகிமைக்காக மாத்திரம் வாழக்கூடியவர்களாக ஆசீர்வதித்த தேவனுக்கே சகல நன்றிகளையும், மகிமையையும் நான் ஏறெடுக்கிறேன்.

கண்காணி ஜேவோ பார்க், 2-3வது ஆண்கள் குழுவின் தலைவர், தென்கொரியா. 183வது கொரிய பதிப்பில் சாட்சி கொடுத்தவர்.

## “தேவனுடைய கிருபைக்கு நன்றி செலுத்தும்விதமாக என்னுடைய குடும்பம் சந்தோஷமாய் வாழ்கிறது”

1998ல், நான் மான்மின் மத்திய சபையில் பங்குபெற துவங்கினேன். அறிவர்.ஜேராக் லீ அவர்களுடைய பிரசங்கங்களின்மூலமாக நான் சமாதானம் பெற்றேன்; அஜீரண கோளாறு மற்றும் முதுகு வலியிலிருந்து சுகமடைந்தேன்.

அந்த தருணத்தில் நானும் என்னுடைய மனைவியும் திருமணம் செய்து இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தது. எங்களுக்கு குழந்தை இன்னும் இல்லாததால் நாங்கள் கவலையடைந்தோம். ஆனால் ஒரு இரவில் என் சொப்பனத்தில் தலைமை போதகர் தோன்றி, அவருடைய வலது கரத்தில் வைத்திருந்த ஒரு குழந்தையை வைத்திருந்தார்; அவளை என்னிடத்தில் கொடுத்துவிட்டு, அவர், “அவளை யிரிம் என்றழை” என்று சொன்னார். அதன்பிறகு, என்னுடைய மனைவி வித்தியாசமான அறிகுறிகளை சரீரத்தில் உணர்ந்ததால் மருத்துவமனைக்குச் சென்றாள். அவள் ஆறு வார கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்தது.

தேவன் அதன்பிறகு அநேக மகள்களையும், ஒரு மகனையும் கொடுத்தார். நாங்கள் சந்தோஷமாய் வாழ்கிறோம். என்னுடைய பிள்ளைகள் நன்றாய் வளருகிறார்கள்; அவர்கள் ஆரோக்கியமாகவும், அருமையானவர்களாகவும் இருக்கின்றனர். நான் ஓய்வுநாளை ஆசரித்து, முழு தசமபாகத்தையும் காணிக்கைகளையும் ஆர்வத்தோடு கொடுத்து ஜெபிக்கிறேன். ஆதலால் தேவன் ஒன்றும் எனக்கு குறைவில்லாத ஆசீர்வாதத்தை கொடுத்திருக்கிறார்.

நான் பெற்ற கிருபைக்கு கைமாறாக, மேய்ப்பரின் இதயத்தோடுகூட என்னுடைய ஆண்கள் குழு மற்றும் சிறு குழுவிலுள்ள ஆத்துமாக்களை பராமரிப்பேன். பதில்களையும் ஆசீர்வாதங்களையும் கொடுத்த தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.



சகோதரி சோபி அடின், நைரோபி மான்மின் சபை, கென்யா. 374வது பதிப்பில் சாட்சி கொடுத்தவர்.

## “வல்லமையால் நான் ஒரு மகளைப் பெற்றேன்! அவள் நன்றாக வளர்கிறாள்”



ஏப்ரல் 2013ல், நான் ஏழு வார கர்ப்பிணியாக உள்ளேன் என்ற நல்ல செய்தியை கேட்டேன். பின்னர் மருத்துவமனையிலிருந்து என்னுடைய வயிற்றிலுள்ளது ஒரு ஆண் குழந்தை என்று அறிந்துகொண்டேன். ஆனால் உண்மையில் நான் ஒரு மகளைப் பெற்றெடுக்கவே விரும்பினேன்.

ஜனவரி 5, 2014ல் நான் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய பிரசங்கத்தை கேட்டேன். அதில் அவர் மறு சிருஷ்டிப்பின் கிரியைகளை குறித்துப் பேசினார். நான் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வல்லமையினால் கர்ப்பத்தில் உள்ள என்னுடைய மகன் மகளாக மாறமுடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டேன். ஆகவே நான் விசுவாசத்தோடு ஜெபித்து, ஜனவரி 17 அன்று வெள்ளிக்கிழமை முழு–இரவு ஆராதனையில் நோயாளிகளுக்கான அவருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். என் பிரசவ காலம் ஏறக்குறைய அருகாமையில் இருந்தபோதும், என் கர்ப்பத்தில் இருந்த ஆண் குழந்தை மகளாக மாறிவிடும் என்பதை நான் விசுவாசித்தேன். அடுத்த நாள் இரவு 11 மணிக்கு நான் என் குழந்தையைப் பெற்றெடுத்தேன். அக்குழந்தை மிகவும் அழகான ஆரோக்கியமான 3 கி.கி எடைநிறைந்த மகள்.

என்னுடைய மகள் ஆரோக்கியமாக இருக்கிறாள்; தற்போது தனியாக நடக்க முயற்சிக்கிறாள். அவள் துதித்து நடனமாடுவதை விரும்புகிறாள். நான் அவளுக்கு வெள்ளிக்கிழமை முழு இரவு ஆராதனையின் இரண்டாம் பகுதியை குறித்த வீடியோவை காண்பிக்கையில் அவள் அழுவதை நிறுத்திவிட்டு, மிகவும் சந்தோஷமாக இருப்பாள். கூடுதலாக, நான் ஆசீர்வாதங்களைப் பெற்றேன்; சபையில் துதிஆராதனையை நடத்துகிறேன். நம்முடைய விசுவாசத்தின்படி கிரியை செய்கிற ஜீவனுள்ள தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.

GCN
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN
World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com